## பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | i. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் தொடர்பாக பல்கலைக்கழகங் கள் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட 25% பங்களிப்புக்களில் 10% ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படவேண்டும். எவ்வாறெனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் 747 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி தொழில் கொள்வோனால் சேமலாப நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் 15 சதவீதப் பங்களிப்பின் 8/15 அளவினை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) தொழில் ஆணையாளர் நாயகத்தின் 2005 சனவரி 28 ஆம் திகதிய பா/தாபனம்/2004 ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 5/ தாபனம் /11 ஆம் இலக்கக் கடிதம் | பல்கலைக்கழக சேமலாப நிதியப் பங்களிப்புக்களின் கணிப்பீட்டின் போதும் பணிக்கொடைக்கான கணிப்பீட்டின் போதும் கல்விசார் படிகள் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை என தொழில் ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்தார். எனினும், கல்விசார் படிகள் ஒய்வூதிய நிதிய கணிப்பீட்டிற்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு முதல் 2011 மே வரை ஓய்வூதிய நிதியத்திற்கு மேலதிகமாக செலவு வைக்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூபா 194 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை, ரூபா 61,151,399 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 25,105,595 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டினைப் பார்க்கிலும் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 36,045,804 தொகையான அதிகரிப்பிற்கு நிலையான வைப்பு வட்டி வருமான அதிகரிப்பு குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1999 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரை ஓய்வூதியம் பெறும் ஓய்வு பெற்றோரின் எண்ணிக்கை 111 ஆனதுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ரூபா 16,867,284 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வு பெற்றோரின் நிதியத்தில் செலவில் உள்ள மீதி ரூபா 76,114,209 ஆனதுடன்

அம் மீதியிலிருந்து எதிர்காலத்தில் காணப்படக்கூடிய பொறுப்புக்களை கவனத்தில் கொள்ளப்படாத போதிலும் சுமார் 4 1/2 வருட காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் செலுத்தக் கூடியதாயிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றோரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி இல்லாத போதிலும் ரூபா 1,303,638 தொகை பதினொரு அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

ஓய்வூதியம் பெறுகையில் 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திராத உத்தியோகத்தர்களுக்கு அவர்களது ஓய்வூதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத்தொகையும் வட்டியும் மீளச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில் விண்ணப்பத்தில் குறைபாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு தீர்க்கப்பட்டதன் பின்னர் ஓய்வூதிய விண்ணப்பப் படிவம் ஓய்வூதிய பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளுக்கும் ஓய்வூதியக்காரருக்கு உரித்தான தொகை செலுத்தப்பட்ட நாளுக்கும் இடையே நீண்டகால தாமதம் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஆ) பங்களிப்புக்களை கணிப்பீடு செய்தல்